## நன்றியுரை

*'திருவரங்கம் தந்த இசைக்கொடை'* என்னும் இப்பொருளில் ஆய்வு மேற்கொள்ள வாய்ப்பளித்த பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இசை முனைவர் பட்டத்திற்காக ஆய்வு மேற்கொள்ள இசைவளித்து ஊக்கப்படுத்திய திருச்சி சீத்தாலக்குமி இராமசாமி கல்லூரியின் தாளாளர் திரு இரா. பஞ்சாபகேசன் அவர்கட்கும், கல்லூரி முதல்வர் டி.எஸ். ஜானிபாய் அவர்கட்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ் ஆய்வுப்பணிக்கு நெறியாளராக இருந்து என்னை ஊக்குவித்து அன்போடு நல்லாற்றுப்படுத்திய திருவையாறு, அரசர் கல்லூரி முதல்வர் முனைவர் சண்முக. செல்வகணபதி, எம்.ஏ., பி.ஓ.எல்., எம்.எட்., எம்.ஃபில்., பிஎச்.டி., டிப்.இன்.சமஸ்கிருதம், அவர்கட்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முனைவர் பட்ட ஆய்வுக்குழுவில் இணைநெறியாளராக இருந்து அன்போடு என்னை நல்லாற்றுப்படுத்திய தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவி முனைவர் இ. அங்கையற்கண்ணி அவர்கட்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தந்தையார் அமரர் அண்ணா ந. அரங்கராச பட்டர் இசையை முதன்மைப் பாடமாகப் படிக்க வைத்ததோடல்லாமல் இவ் ஆய்வுக்கருவின் மீது சிறுவயதிலிருந்தே என் நாட்டத்தை வளர்த்து, ஊக்கப்படுத்தித் தான் அறிந்த பல அரிய கருத்துக்களைக்கூறி என்னை நெறிப்படுத்தினார். அவர் மறைந்த பிறகும் அவரது கையெழுத்து நகல்கள் இவ் ஆய்விற்குப் பேருதவியாய் இருந்தன. அவரை நன்றியோடு நினைவு கூர்தல் என் கடமையாகும்.

பாடல்கள் பலவற்றையும், இசைக் கூறுகளையும் கற்றுத் தந்த என்னுடைய கல்லூரிப் பேராசிரியைகளுக்கும், தனிப்பட்ட முறையில் பயிற்சி அளித்த அமரர் ஸ்ரீரங்கம் ரங்கய்யங்கார், எம்பார் ராகவசிம்மன், ஜே.வெங்கட்ராமன் ஆகியோருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிழற்படம் எடுத்து உதவியதோடல்லாமல் ஆய்வுக்கான பல செய்திகளைக் கூறி உதவிய என் தம்பி ஆர். நந்தகுமார் பட்டருக்கும், கள ஆய்விற்குச் சென்றபோதெல்லாம் பல வகைகளில் உதவி புரிந்த அவரது துணைவியார் மாலினி, மகள்கள் அரங்கப்ரியா, பத்மப்ரியா, மகன் இராகவன் ஆகியோருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வுக்கான பல செய்திகளைக் கூறி உதவிய என் தம்பிகள் ஆர். நரசிம்ம பட்டர், ஆர். முரளீதர பட்டர் ஆகியோருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னை இப்பணியில் ஈடுபடுத்தி ஊக்குவித்ததோடல்லாமல் இவ் ஆய்வேட்டினைச் சிறப்புறக் கணிப்பொறியில் வடிவமைத்து, கட்டமைத்துத் தந்த என் கணவர் எஸ். பார்த்தசாரதி அவர்கட்கு என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

பல முறை நேரில் சென்ற போது அலுப்பில்லாமல் தன்னுடைய பணிகளுக்கிடையே எனக்கு நேரம் ஒதுக்கி அரையர்சேவை பற்றிய செய்திகளையும், கோயில் பற்றிய செய்திகளையும் கூறி என்னை ஊக்குவித்து இந்த ஆய்வைத் தொடருமாறு பணித்த அரையர் அமரர் நாதமுனிகள் அவர்களை நான் நன்றியோடு நினைவு கூர்கிறேன்.

அரையர் சேவையைப் பற்றிப் பலவிளக்கங்கள் அளித்து, பாசுரங்களைப் பாடி, அபிநயித்துக் கணினித் தட்டில் பதிவு செய்து கொடுத்துப் பேருதவி புரிந்த இலக்குமிநாராயண அரையர், அரங்கநாத அரையர் ஆகியோருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வருடமகோத்சவ கீர்த்தனைகள் என்ற கையெழுத்துப் பிரதி மற்றும் பல நூல்களை மனமுவந்து அளித்துப் பேருதவி புரிந்த ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியார் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவரங்கம் திருக்கோயிலின் கி.பி. 1928ஆம் ஆண்டின் நாட்குறிப்பைத் தந்தும், சில ஐயங்களுக்கு விளக்கமளித்தும் உதவிய அமரர் திரு 'ஹிட்லர்' திருமலை ஐயங்கார் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வுக்கான பல விளக்கங்களைத் தந்துதவியும், நிழற்படங்கள் எடுத்தும், வீடியோ எடுத்தும், கணினித் தட்டில் பதிவு செய்தும் உதவிய கே. வீரராகவன் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வுக்காக நூல்களை அளித்து உதவிய திருவரங்கம் திருக்கோயில் நூலகர், சென்னை உ.வே.சா. நூலகத்தின் நூலகத்தினர், சென்னைப் பல்கலைக்கழக நூலகர்கள் திருமதி கமலா, திருமதி சந்திரா தஞ்சை சரஸ்வதி மஹால் பண்டிதர் திரு என். விஸ்வநாதன், சென்னை கலாக்ஷேத்ரா நூலகர்கள் திருமதி கீதஜயந்தி, திருமதி புவனேஸ்வரி ஆகியோருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைஞர்கள் பலரின் அரிய பாடல்களைப் பதிவு செய்து கொடுத்து உதவிய எஸ். எஸ். கோபால் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆய்வுக்கான சில கிருதிகளைக் கற்றுத்தந்த முனைவர் வி. வி ஸ்ரீவத்சா, கலாக்ஷேத்ரா இயக்குனர் திரு எஸ். ராசாராம் ஆகியோருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னை ஊக்கப்படுத்திப் பலவாறு உதவிய திருச்சி சீத்தாலக்குமி இராமசாமிக் கல்லூரி இசைத்துறை ஆசிரியைகள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகம நூல்களிலும், ஆழ்வார் பாடல்களிலும் ஐயங்களை நீக்கித் தெளிவுபடுத்திய மன்னார்குடி இராசகோபாலய்யங்கார் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ர. லலிதா ருக்மணி